DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC-163/2023
Prosecution witness – PW.2

| | | |
|---|---|---|
| Name | : திருமதி. வள்ளி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

( Accused are present)
02.02.2024 – 05.30 PM
சாட்சியை நிலைய WGr.I PC–171 அவர்கள் அடையாளம் காட்டினார்.
<u>முதல் விசாரணை</u>:-

1. நான் கிடாத்திருக்கை கிராமத்தில் எனது மகளுடன் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது பேத்தி. ஆஜர் எதிரிகளைத் தெரியும்.

2. சுமார் 1 ஆண்டிற்கு முன்பு ஒருநாள் நளமுருகன் என்பவர் தம்பி நள்ளிரவு 01.00 மணியளவில் வந்து கொடியில் காயப்போட்டிருந்த சேலையை எடுத்து மூடிக் கொண்டு அடுப்படியில் தூங்கிக் கொண்டிருந்த எனது பேத்தியின் செல்போனை எடுத்த போது எனது பேத்தி ஆத்தா எனது செல்போனை எடுக்கிறான் என்று சத்தம் போடவும், நான் எழுந்துவிட்டேன். நான் அவரது முகத்தை பார்த்தேன். இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகி உள்ளார்.

3. எனது மருமகன் வெளியில் தூங்கிக் கொண்டிருந்தார். சத்தம் கேட்டு எனது மருமகன் எழுந்து என்ன சத்தம் என்று கேட்டார். நாங்கள் வருவதை பார்த்து நளமுருகன் தம்பி அங்கிருந்து கருவேல வேலிக்குள் ஓடிவிட்டார்.

4. சம்பவம் குறித்து காலையில் புகார் அளிக்கலாம் என்று எனது பேத்தி சென்ற போது காலை 07.00 மணியளவில் நளமுருகன் தம்பி வந்து இருசக்கர வாகனத்தில் வந்து எனது பேத்தியை உரசுவது போல் வந்து போலீசில் புகாரா கொடுக்கிறாய் என்று சொல்லி எனது பேத்தியின் குரல்வளையை பிடித்து அழுத்தி நெறித்தார்.

5. நாங்கள் விலக்கிவிட்டோம். பின்னர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள். சம்பவத்திற்கு முன்பாக நளமுருகன் எனது பேத்தியை நான் கட்டிக் கொள்வேன் என்று பழகியுள்ளார்.

ஆனால் திருமணம் செய்யவில்லை.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.